**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC - 663 of 2024**

**வழக்கு சாட்சி:PW - 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முகைதீன் அப்துல் காதர் | தேதி : | 28.07.2025 |
| தந்தை பெயர்: | மீரான் மைதீன் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 28.07.2025.

**முதல் விசாரணை**

**நான் மேலப்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சயமம் திருநெல்வேலியில் உள்ள மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். இதற்கு முன்பு நான்குநேரி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்த போது 04.11.2015 ம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் நான் நீதிமன்ற பணியில் இருந்து வேலை பார்த்து கொண்டிருக்கும் போது அதே நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கிற்கு வரும் ஆஜர் எதிரி முருகன் என்ற பதக் முருகன் என்பவர் அவரின் மனைவி மற்றும் அவரது மகனுடன் நீதிமன்றத்திற்கு வந்து கையில் மண்ணெண்ணையுடன் வந்து**

தன்னை அடித்தவனை கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் தான் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்வேன் என்று கையில் வைத்திருந்த மண்ணெண்ணையை அவர் மீதும் அவரின் மகன் மீதும் ஊற்றி தீ வைக்க சென்றார். உடனே வாய்தாவிற்கு வந்தவர்கள் மற்றும் போலிசார் அவரை தடுத்தனர். நானும் முருகன் மற்றும் பரமசிவன் என்ற நீதிமன்ற ஊழியருக்கு சம்பவம் பற்றி தெரியும். இதனால் நீதிமன்ற பணிக்கு இடையூறு ஏற்பட்டது. மேற்படி எதிரியின் செயலை நீதிபதிக்கு தெரிவித்தோம். நீதிபதி புகார் மனு கொடுக்க என்னை பரிந்துரை செய்ததன் பேரில் நான் நான்குநேரி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு என்னால் எழுதி கொடுக்கப்பட்டதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் மனு அ.சா-ஆ.1 ஆகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர். சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

# வாக்குமூலம்

## சார்பு நீதிமன்றம் , நான்குநேரி

## வழக்கு எண்:SC - 663 of 2024

## வழக்கு சாட்சி:PW - 2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | முருகன் | தேதி : | 28.07.2025 |
| தந்தை பெயர்: | இசக்கி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 28.07.2025.

**முதல் விசாரணை**

நான் அம்பாசமுத்திரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சயமம் தற்சமயம் செங்கோட்டையில் உள்ள மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கட்டளை பணியாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். இதற்கு முன்பு நான்குநேரி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த போது 04.11.2015 ம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் நான் நீதிமன்ற பணியில் இருந்து வேலை பார்த்து கொண்டிருக்கும் போது அதே நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கிற்கு வரும் ஆஜர் எதிரி முருகன் என்ற பதக் முருகன் என்பவர் அவரின் மனைவி மற்றும் அவரது மகனுடன் நீதிமன்றத்திற்கு வந்து கையில்

மண்ணெண்ணையுடன் வந்து தன்னை அடித்தவனை கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் தான் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்வேன் என்று கையில் வைத்திருந்த மண்ணெண்ணையை அவர் மீதும் அவரின் மகன் மீதும் ஊற்றி தீ வைக்க சென்றார். உடனே வாய்தாவிற்கு வந்தவர்கள் மற்றும் போலிசார் அவரை தடுத்தனர். நீதிமன்ற ஊழியர்கள் அ.சா.1 , பரமசிவன் மற்றும் எனக்கு சம்பவம் பற்றி தெரியும். இதனால் நீதிமன்ற பணிக்கு இடையூறு ஏற்பட்டது. மேற்படி எதிரியின் செயலை நீதிபதிக்கு தெரிவித்தோம். நீதிபதி புகார் மனு கொடுக்க அ.சா.1 ஐ பரிந்துரை செய்ததன் பேரில் அ.சா.1 நான்குநேரி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை :**

எதிரி ஆஜர். சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

**வாக்குமூலம்**

**சார்பு நீதிமன்றம் , நான்குநேரி**

**வழக்கு எண்:SC - 663 of 2024**

**வழக்கு சாட்சி:PW - 3**

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பரமசிவம் | தேதி : | 28.07.2025 |
| தந்தை பெயர்: | பாவநாசம் பிள்ளை | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுக்கா: | | வயது: | |

(எதிரி ஆஜர்).

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 in the day 28.07.2025.

**முதல் விசாரணை**

நான் திருநெல்வேலியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்சயமம் தற்சமயம் நான்குநேரி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1, அ.சா.2 ஐ எனக்கு தெரியும். இதற்கு முன்பு நான்குநேரி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக பணிபுரிந்த போது 04.11.2015 ம் தேதி மாலை சுமார் 3.30 மணியளவில் நான் நீதிமன்ற பணியில் இருந்து வேலை பார்த்து கொண்டிருக்கும் போது அதே நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழக்கிற்கு வரும் ஆஜர் எதிரி முருகன் என்ற பதக் முருகன் என்பவர் அவரின் மனைவி மற்றும் அவரது மகனுடன் நீதிமன்றத்திற்கு வந்து கையில் மண்ணெண்ணையுடன் வந்து தன்னை அடித்தவனை

கைது செய்ய வேண்டும் இல்லை என்றால் தான் குடும்பத்துடன் தற்கொலை செய்து கொள்வேன் என்று கையில் வைத்திருந்த மண்ணெண்னையை அவர் மீதும் அவரின் மகன் மீதும் ஊற்றி தீ வைக்க சென்றார். உடனே வாய்தாவிற்கு வந்தவர்கள் மற்றும் போலிசார் அவரை தடுத்தனர். நீதிமன்ற ஊழியர்கள் அ.சா.1, அ.சா.2 மற்றும் எனக்கு சம்பவம் பற்றி தெரியும். இதனால் நீதிமன்ற பணிக்கு இடையூறு ஏற்பட்டது. மேற்படி எதிரியின் செயலை நீதிபதிக்கு தெரிவித்தோம். அ.சா.1 நான்குநேரி காவல் நிலையம் சென்று புகார் மனு கொடுத்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

எதிரி ஆஜர். சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.